தாசேக் பெர்மாய் தமிழ்ப்பள்ளி

## *விந்தை சக்தியைக் கொண்டு நான் ஒரு கைப்பேசி தயாரித்தால் ......*

____________________ என்றாலே அனைவரும் வியந்து பார்க்கும் ஒன்றுதான். சுதந்திரமாக நம் எண்ணங்களுக்கு ஏற்பச் செயல்படும் ஒரு விந்தையான ஆற்றல் எனக்குக் கிடைத்தால் மட்டில்லா மகிழ்ச்சியடைவேன். இன்றைய இளையோரிடையே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ____________________ ஓர் எச்சரிக்கை விசையைப் பொருத்துவேன். குடும்ப உறவுகளின் இனிமையைத் தவிர்த்துவிட்டுக் கைப்பேசியுடன் மட்டுமே தஞ்சமாகும் ______________ விசை மூலம் அறிவுரை கூறச் செய்வேன். நேரத்தையும், காலத்தையும் சரியாக நிர்வகிக்கும் முறையை அந்த ________________ கைப்பேசி மூலம் அறிவிப்பேன்.

ஒழுக்கம் தராத கல்வி, விளைச்சல் தராத நிலத்திற்குச் சமம் என்பதை இளையோர்களின் மனத்தில் பதிய வைப்பேன். பல மணி நேரம் கைப்பேசியில் புலனம், முகநூல், கீச்சகம், வலையொளி, ஊடலை என மூழ்கிக் கிடக்கும் மானிடர்கள், நான் தயாரித்த கைப்பேசியை முறையாகவும் __________________ பயன்படுத்தக் கற்றுக் கொள்ளச் செய்வேன்.

நேரம் கட்டுப்பாடின்றிக் கைப்பேசியைப் பயன்படுத்துவதும், மின்கலம் வலிமை குறைந்ததும்________________ மூலம் மீண்டும் சக்தி பெறச் செய்கின்றனர். பல நேரங்களில் கைப்பேசி மின்னேற்றியில் இருக்கும்போதே பயன்படுத்துகின்றனர். அதிக வெப்பத்தின் காரணத்தினால் கைப்பேசி வெடித்துச் சிதறுவதும் தீப்பிடிப்பதும் உண்டு. இத்தகைய விபத்துகளைத் தடுக்க ________________ ஒலிகளை எழுப்பி முன்னெச்சரிக்கை செய்யும் விசைகளையும் பொருத்துவேன்.

________________ நிலையங்களிலும் பலர் கைப்பேசியைப் பயன்படுத்திப் பல விபத்துகள் ஏற்படக் காரணமாக இருக்கின்றனர். எனவே, வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் வேளையில் தீ ! தீ ! என்னை முடக்கு ! எனும் அபாயக் குரலை எழுப்பும் முறையையும் உள்ளடக்குவேன். வாகனத்தைச் செலுத்தும்போது கைப்பேசி பயன்பாடுகளால் பல விபத்துகள் நிகழ்கின்றன. இதைத் தடுக்க சாலையில் __________________ கவனம் செலுத்து ! என்னைத் தொடாதே ! என்ற ஒலிகளை எழுப்பும் முறையை கைப்பேசியில் புகுத்துவேன்.

கைப்பேசி ____________________________ இருக்க வேண்டும். மாற்றத்தைக் கொணரும் ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தால் அனைவரும் பயன்பெற்று வாழ வழிசெய்வேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| தொல்லைப்பேசியாகாமல் | கவனம் | எரிபொருள் | கைப்பேசியில் | அதிநவீனக் |
| அபாய | மின்னேற்றி | அளவோடும் | விந்தை சக்தி | இளையோருக்கு |

ஆக்கம் : ஷாமினி சந்திரன்

LIVEWORKSHEETS